# IN THE COURT OF ASSITANT SESSIONS JUDGE, METTUR
## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

S.C.No. 173 /2022

Deposition of PW.4 witness of Prosecution/Defence solemnly affirmed by Superintendent/Head Clerk in Sessions Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 02.03.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பாலசுந்தரம் | **Caste** | : | |
| **S/o** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2019 ந்தேதி வழக்கு பதிவுசெய்திருந்த மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 14/2019 ச/பி. 341, 294(பி), 392,397 மற்றும் 506(2) இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த அப்பொதைய காவல் உதவி ஆய்வாளர் திரு.ரௌத்திரி வெங்கடேஷ் அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். 26.01.2019 ந்தேதி மேட்டூர் அணை அருகே குடியிருக்கும் ராமன் மகன் முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று மேட்டூர் காவல்நிலைய குற்ற எண். 14/2019 ச/பி. 341, 294(பி), 392,397 மற்றும் 506(2) இதச வாக வழக்கு பதிவுசெய்துள்ளார். **புகார் அசாஆ. 2, முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து மேட்டூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும் அப்போதைய கொளத்தூர் ஆய்வாளர் பொறுப்பு மேட்டூர் காவல் ஆய்வாளர் திரு.குமார் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பினை

வைத்துள்ளார். காவல் ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் அன்று காலை 13 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பாபு, ஐசக் ஆகியோர் முனனிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அசாஆ.4, மாதிரிவரைபடம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சம்பவயிட சாட்சிகள் முருகன், ரமேஷ், அண்ணாதுரை, கார்த்திக், பாபு, ஐசக் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே 16 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை தேடி மேட்டுர் காவல்நிலைய சரகம் மாசிலாபாளையம் வாட்டர் டேங்க் அருகில் ரகசிய சாட்சிகள் அடையாளம் காட்ட எதிரி செந்தில் (எ) செந்தில்குமார் என்பவரை 16.00 மணிக்கு கைது செய்து கைது செய்த விவரத்தை அவரது மனைவி சோனியா அவர்களுக்கு தெரியப்படுத்தியும், பின்னர் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாபு மற்றும் ஐசக் ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தும் எதிரி ஆஜர் செய்த பணம் ரூ.1000/- மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய மொத்த நீளம் 25 1/2 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்றையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 17.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் எதிரியை 18.00 மணிக்கு நிலையம் வந்து எதிரியை முறைப்படி திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **படிவம் 91 அசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **கைப்பற்றுதல் மகசர் அசாஆ.8** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. **பணம் ரூ.1000/- அசாபொ.1 மற்றும் கத்தி அசாபொ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் மேற்படி புலன்விசாரணை அதிகாரி திரு.குமார் அவர்கள் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் ஆய்வாளர் திரு.தொல்காப்பியன் அவர்களிடம் வழக்கு கோப்பினை வைத்துள்ளார். மேற்படி

வழக்கினை தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வார் திரு.தொல்காப்பியன் அவர்கள் 04.10.2019 ந்தேதி சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்தபோது முந்தைய புலன்விசாரணை அதிகாரியிடம கூறியது போலவே அவரிடமும சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை. 09.10.2019 ந்தேதி DDP அவர்களின் சட்டக்கருத்துரை பெறப்பட்டது. வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகளின் மீது 12.10.2019 ந்தேதி ச/பி. 341, 294(பி), 392,397 மற்றும் 506(2) இதசப்படி இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர விசாரிக்காமல் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரௌத்ரி வெங்கடேஷ் அவர்கள்முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து வைத்திருந்ததை காவல் ஆய்வாளர் திரு.குமார் அவர்கள் சம்பவயிடம் செல்லாமல் அனைத்து ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களை காவல்நிலையத்தில் வைத்தே தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பொய்யான ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்று எதிரி தவறாக கைது செய்திருந்தார் என்றால் சரியல்ல. மேலும் இவ்வழக்கை திரு.தொல்காப்பியன் காவல் ஆய்வாளர் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–பாலசுந்தரம்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.